**E.P.No. 8/2024**
**In**
**O.S.No. 143/2021**
**தேதி. 20.11.2025**

**உத்தரவு பகரப்பட்டது.**

மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் இம்மனுவை கட்டளை 21 விதி 43, 43A மற்றும் 77 உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரருக்கு செந்தமான அசையும் சொத்துக்களை ஜப்தி செய்து ஏல விற்பனை மூலம் விற்பனை செய்து மனுதாரருக்கு தீர்ப்பாணை படி சேரவேண்டிய தொகையை வசூலித்து தர கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

3) இருதரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**4)** மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் படி இம்மனுதாரர் ரூ.2,53,437/– செலுத்த வேண்டியுள்ளதாகவும், எதிர்மனுதாரர் அதனை செலுத்தி வைக்காததால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை ஜப்தி செய்து ஏல விற்பனை மூலம் விற்பனை செய்ய உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

5) எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் எதிர்மனுதாரரின் பொருட்கள் இல்லை என்றும், 2வது எதிர்மனுதாரரின் கணவரின் பொருட்கள் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. 2வது எதிர்மனுதாரர் எ.ம.சா..1 ஆக சாட்சியமும் அளித்துள்ளார். ஆனால், அசையும் பொருட்கள் மனுதாரரின் கணவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

6) மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை படியான தொகையை வசூலித்து கொடுக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும். எதிர்மனுதாரர் தரப்பில் எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபனைகள் நிலைக்கத்தக்கதல்ல. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாமென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்.